இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 295 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 23 – சனிக்கிழமை 06 ஜூன் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 295 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 23 - Saturday 06 June 2026 - Chennai 12 Pages ₹ 5.00




கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நாளான நேற்று, சென்னை திருவல்லிக்கேணி – வாலாஜா சாலை பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் உள்ள காயிதே மில்லத் அவர்களின் நினைவிடத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்ப் போர்வை போர்த்தி மரியாதை செலுத்தினார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.கே.சேகர்பாபு, ஆவடி சா.மு.நாசர், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, முன்னாள் எம்.பி., எம்.எம்.அப்துல்லா, சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் எஸ். மதன் மோகன், கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் இறையன்பன் குத்தூஸ், சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா உள்பட ஏராளமான கழக முன்னோடிகளும் கழகத் தோழர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

### தெற்கில் தோன்றி, வடக்கில் ஒளிர்ந்த ‘கண்ணியத் தென்றல்’ காயிதே மில்லத்!

# இசுலாமியப் பெருமக்களுக்கு என்றும் துணை நிற்போம்! சமூக நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாப்போம்!

### காயிதே மில்லத் பிறந்த நாளையொட்டி வெளியிட்ட வலைதளப் பதிவில் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜூன் 6-**

**கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பிறந்தநாள் நேற்று!**

**இந்நாளில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை - திருவல்லிக்கேணி - வாலாஜா சாலை - பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் உள்ள காயிதே மில்லத் அவர்களின் நினைவிடத்தில் மலர்ப் போர்வை போர்த்தி மரியாதை செலுத்தினார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.**

**அதனையடுத்து, கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்ட வலைதளப் பதிவில், “தெற்கில் தோன்றி, வடக்கில் ஒளிர்ந்த ‘கண்ணியத் தென்றல்’ காயிதே மில்லத்!” என்று புகழாரம் சூட்டினார்.**

**மேலும் அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள், “இசுலாமியப் பெருமக்களுக்கு என்றும் துணை நிற்போம்! சமூக நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாப்போம்!” என்று உறுதி படக் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

தெற்கில் தோன்றி, வடக்கில் ஒளிர்ந்த ‘கண்ணியத் தென்றல்’ காயிதே மில்லத் அவர்களின் 131ஆவது பிறந்த நாளில் அவரது புகழைப் போற்றுகிறேன்!

“தமிழ் ஆட்சிமொழியாக வேண்டும்” என அரசியல் நிர்ணய சபையில் முழங்கிய மாண்பாளர்; கல்வி வளர்ச்சிக்காக அரும்பணிகளைச் செய்த தகைமையாளர்.

பேரறிஞர் அண்ணா காலம் தொட்டு, தேர்தல் அரசியலைக் கடந்து உருவான உறவின் உரிமையோடு, இசுலாமியப்பெருமக்களுக்கு என்றும் துணை நிற்போம்! சமூக நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாப்போம்!

இவ்வாறு - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### மகாராஷ்டிரா:

## நீட் வினாத்தாள் கசிவு! மாணவி தற்கொலை!

*மும்பை,ஜூன்.6-*

*நீட் வினாத்தாள் கசிந்த விவகாரத்தில் தேர்வெழுதிய மாணவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரை சேர்ந்த 18 வயதான மாணவி, கடந்த மே 3 ஆம் நடந்த நீட் நுழைவுத் தேர்வினை எழுதினார்.*

*பின்னர், வினாத்தாள் கசிந்த விவகாரத்தில் தேர்வு ரத்து செய்யப்பட்டு மறுதேர்வு வரும் 21 ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. நீட் தேர்வுகாக பல மாதங்களாக கடினமாக தயாராகி தேர்வினை எழுதிய மாணவி, வினாத்தாள் கசிந்த விவகாரத்தால் மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை செய்து கொண்டார்.*

*என்னை மன்னித்து விடுங்கள் மீண்டும் ஒரு தேர்வினை எதிர்கொள்ள எனக்கு தைரியம் இல்லை என்று அந்த மாணவி எழுதி வைத்த கடிதம் மனதை உலுக்கி உள்ளது. வினாத்தாள் கசிவால், அந்த மாணவியின் குடும்பம் வாழ்நாள் துன்பத்தை அடைந்துள்ளது. மகளை மருத்துவர் ஆக்குவதற்காக, விவசாயியான அவரது தந்தை 3 லட்சம் ரூபாய் கடன் பெற்றதுடன், சமையல் காரராகவும் பணிபுரிந்து வந்தார்.*

*இருந்தபோதிலும், அவர்களிடமிருந்து அவர்களின் மகளை வினாத்தாள் கசிவு பறித்துக் கொண்டது. நீட் வினாத்தாள் கசிவால் இதுவரை 6 மாணவர்கள் பலியான போதிலும், இந்த விவகாரம் குறித்து பிரதமர் மோடி வாய் திறக்கவே இல்லை.*

---

### ‘ஜி ராம் ஜி’ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு

# ரூ.12,698 கோடி வழங்கப்பட்ட நிலையில், தற்போது ரூ.3,923 கோடி மட்டுமே ஒதுக்கீடு!

## தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு – அக்கறை காட்டாத த.வெ.க. அரசு!

சென்னை, ஜூன் 6 –

ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு மாற்றியமைக்கப்பட்டதால் தமிழகத்திற்கு வெறும் ரூ.3,923 கோடி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன. ஆனால், உத்தரபிரதேசம் மற்றும் குஜராத் போன்ற பாஜ ஆளும் மாநிலங்களில் நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் தென் மாநிலங்களை ஒன்றிய அரசு ஓரம் கட்டி இருப்பது வெட்டவெளிச்சமாகியுள்ளன. ஆனால் தவெக அரசு இதுகுறித்து கருத்து தெரிவிக்காமல் அமைதியாக இருப்பது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் என்று அழைக்கப்பட்டும், பொதுமக்களிடம் பரவலாக நூறு நாள் வேலை வாய்ப்புத்திட்டம் என அறியப்பட்டு வந்ததின் பெயரையும் அதன் பழைய கட்டமைப்புகளையும் மாற்றி நாடாளுமன்றத்தில் ‘ஜி ராம் ஜி’ திட்டம் என்ற ஒரு வரைவு சட்டம் பா.ஜ. அரசு கொண்டு வந்து இரு அவைகளின் ஒப்புதலுடன் நிறைவேற்றின.

இதனை பல மாநிலங்களில் ஆளும் கட்சியினர் எதிர்த்தனர். குறிப்பாக, தமிழக முதல்வராக இருந்த மு.க.ஸ்டாலின் ஜன.23ம் தேதி சட்டப்பேரவையில் இத்திட்டத்தினை எதிர்த்து தனி தீர்மானத்தை நிறைவேற்றினார். இது அனைத்து கட்சிகளின் ஆதரவோடு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாட்டைப் போலவே பஞ்சாப், தெலங்கானா போன்ற மாநிலங்களும் இப்புதிய சட்டத்திற்கு எதிராக தங்களின் சட்டமன்றங்களில் தீர்மானங்களை நிறைவேற்றின.

சுருக்கமாக கூறினால், தமிழ்நாட்டின் கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், மாநிலத்தின் நிதி உரிமையை நிலைநாட்டவும் ஒன்றிய அரசுக்கு எதிராக தன் வலுவான சட்டப்பூர்வ எதிர்ப்பைச் சட்டமன்றத்தின் வாயிலாக மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பதிவு செய்தன. தற்போது இந்த ஜி ராம் ஜி சட்டம் இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்திற்கு கடுமையான சவாலாக உருவெடுத்துள்ளது.

அந்தவகையில் 16வது நிதி ஆணைய பரிந்துரையின் படி மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீடு திருத்தி அமைக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் மாநிலங் களுக்கு தற்போது அனுப்பிய வரைவு அறிக்கை அண்மையில் அனுப்பி வைத்துள்ளது. அதில் ஜி ராம் ஜி திட்டத்தில் ஒன்றிய அரசு ஒதுக்கும் ஒட்டுமொத்த நிதி ரூ.95,692 கோடியில் தமிழத்திற்கு வெறும் ரூ.3,926 கோடி மட்டும் கிடைக்க உள்ளன.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக ஒன்றிய அரசு வழங்கும் ஒட்டுமொத்த நிதியில், தமிழ்நாடு இதுவரை 10 சதவீத பங்கைப் பெற்று முன்னணியில் இருந்தது. ஆனால், புதிய கணக்கீட்டு முறையின்படி, தமிழ்நாட்டின் பங்கு 4.10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. முந்தைய காலங்களில் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் எதிர்கால நிதி உரிமை, ஒரேயடியாக பாதிக்கும் கீழ் சரிந்துள்ளதை இந்த தரவுகள் காட்டுகின்றன.

இதுமட்டுமின்றி, ஜிராம்ஜி திட்டத்தின் கீழ் ஆந்திராவுக்கு 8.8 சதவீதம் வழங்கப்பட்ட நிலையில் 4.20 சதவீதமும், கேரளாவுக்கு 3.94 சதவீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2.38 சதவீதமும், தெலங்கானாவுக்கு 3.94 சதவீதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2.17 சதவீதமும் குறைப்பட்டுள்ளது. இதனால் தென் மாநிலங்கள் ஓரங்கட்டப்பட்டு இருப்பது வெட்டவெளிச்சமாகி உள்ளன.

ஆனால் பா.ஜ. ஆளக்கூடிய உத்தரபிரதேசத்திற்கு ஒதுக்கப்படும் நிதி 9.67 சதவீதத்தில் இருந்து 17.62 சதவீதமும், பீகாருக்கான நிதி 6.10 சதவீதத்தில் இருந்து 9.95 சதவீதமும், மராட்டிய மாநிலத்திற்கு நிதி 3.99 சதவீதத்திலிருந்து 6.44 சதவீதமும், குஜராத்துக்கு அளிக்கப்படும் நிதி 1.49 சதவீதத்தில் இருந்து 3.76 சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த மாற்றியமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ஜூலை 1ம் தேதி முதல் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளன.


ஏற்கனவே, மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கான நிலுவை தொகையான ரூ.4,034 கோடியை (கூலி மற்றும் பொருட்கள் பங்கு) ஒன்றிய அரசு நீண்ட நாட்களாக தமிழ்நாட்டிற்கு வழங்காமல் இழுத்தடித்த போது திமுக சார்பில் மாநிலம் தழுவிய பிரமாண்ட போராட்டங்கள் நடத்தப்பட்டன. கல்வி நிதியை சமக்ர சிக்ஷா அபியான் முடக்குவது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதியை தராமல் தாமதிப்பது மற்றும் வரிப் பகிர்வில் தமிழ்நாட்டிற்கு தகுந்த பங்களிக்காமல் புறக்கணிப்பது என பல்வேறு தளங்களில் ஒன்றிய அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் மத்தியில் வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

**12 வருடத்தில் ரூ.87 ஆயிரம் கோடி நிதி**

கடந்த 2014 முதல் 2026 வரையிலான காலக்கட்டத்தில் இந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடமிருந்து ஒட்டு மொத்தமாக ரூ.87,639 கோடியை பெற்றுள்ளது. நாட்டின் மொத்த நிதியில் 10 சதவீதம் பங்கினை தமிழ்நாடு மட்டுமே பெற்று வந்த நிலையில், தற்போதைய புதிய சட்ட மாற்றங்கள் இந்த நிதிப் பகிர்வை பாதியாகக் குறைத்துள்ளன. கடந்த காலங்களை பொறுத்தவரை 2023–24 நிதியாண்டில் ரூ.12,698 கோடி, 202425 நிதியாண்டில் ரூ.10,156 கோடி, 202526 நிதியாண்டில் ரூ.5,878 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த விஷயத்தில் தமிழ்நாடு முதல்வர் விஜய் உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்துவாரா அல்லது போராட்டங்களை முன்னெடுப்பாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் தமிழ்நாடு அரசு அமைதியாக இருப்பது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

---

## மின் கட்டணத்தை உயர்த்த த.வெ.க. அரசு திட்டம்?



சென்னை,ஜூன்.6-

மின்கட்டணம் தொடர்பாக பொதுமக்களிடம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கருத்து கேட்பதால், தமிழ்நாட்டில் மின்கட்டணத்தை உயர்த்த த.வெ.க. அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மின்கட்டணம் தொடர்பான கருத்துகளையும், ஆலோசனைகளையும் பொதுமக்களிடம் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் கேட்டுள்ளது.

15 நாட்களுக்குள் பொதுமக்கள் கருத்துக்களை தெரிவிக்க வலியுறுத்தப்பட்டிருந்தது. கடந்த 2025 ஆம் ஆண்டில் வீட்டு நுகர்வோர்களுக்கான உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை அரசே ஏற்கும் என, முந்தைய திராவிட மாடல் அரசு தெரிவித்திருந்தது. மின்கட்டண உயர்வு என்பது 6 சதவீதத்தை விட அதிகரிக்க கூடாது அல்லது ஏப்ரல் மாத நுகர்வோர் விலை குறியீட்டு எண் ஆகிய இரண்டில் எது குறைவோ அதனடிப்படையில் உயர்த்த வேண்டும் என விதியாக வகுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஏப்ரல் மாதத்திற்கான நுகர்வோர் குறியீட்டு எண் 3.48 வரை கணக்கிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து, திருத்தியமைக்கப்பட்ட புதிய மின் கட்டணத்தை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விரைவில் அறிவிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது. உயர்த்தப்படும் மின் கட்டணத்தை வீட்டு நுகர்வோர்களுக்கான கட்டணத்தை முந்தைய திமுக அரசை போன்று த.வெ.க. அரசு ஏற்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

---

### சென்னையில்

## பெண் காவலர் மீது தாக்குதல்!

சென்னை,ஜூன்.6-

சென்னை மயிலாப்பூரில் உள்ள காவல் குடியிருப்பைச் சேர்ந்தவர் ரேவதி. இவர் மெரினா காவல் நிலையத்தில், தலைமை போக்குவரத்து காவலராக பணியாற்றி வருகிறார். இந்நிலையில், வீட்டுக்கு தேவையான காய்கறிகளை வாங்குவதற்காக தனது மகளுடன் பாரிமுனைக்கு சென்றுள்ளார். அப்போது, காய்கறி கீழே விழுந்த விவகாரத்தில் காவலர் ரேவதியிடம் கடை வியாபாரி காவியா தகராறில் ஈடுபட்டு தாக்குதல் நடத்தியுள்ளார்.

மேலும் தடுக்க வந்த ரேவதியின் மகள் மீதும் அவர் தாக்குதல் நடத்தினார். தொடர்ந்து காவியாவுடன் 10க்கும் மேற்பட்டோர் சேர்ந்து பெண் காவலரை கொடூரமாக தாக்கியுள்ளனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. காயமடைந்த பெண் காவலர், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். இந்நிலையில், இந்த விவகாரத்தில் காவல்துறை நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

---



### தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை

# மேம்பாலப் பணிகள் ஆமை வேகத்தில் நடக்கிறது!

## எஞ்சிய 30% பணிகளை முடிக்கவே திணறும் த.வெ.க. அரசு!

சென்னை,ஜூன்.6-

சென்னையில் முக்கியத்துவம் வாய்ந்த சைதாப்பேட்டை தேனாம்பேட்டை மேம்பாலப் பணிகள் த.வெ.க. ஆட்சியில் ஆமை வேகத்தில் நடப்பதால் வாகன ஓட்டிகள் கடும் அவதியடைந்து வருகின்றனர்.

சென்னை அண்ணா சாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேடடை வரை 3.2 கிலோ மீட்ட நீளத்தில் மேம்பாலப் பணிகள் திராவிட மாடல் ஆட்சியில் தொடங்கப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்கு முன்பு வரை 70 சதவிகிதப் பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில், தவெக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மேம்பாலப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எஞ்சிய 30 சதவீத பணிகளை முடிக்கவே புதிய அரசு திணறி வருவதால் போக்குவரத்து நெரிசல் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால், வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். தேனாம்பேட்டை மேம்பாலப் பணிகள் எப்போது நிறைவடையும் என்பதேது கேள்விக்குறியாகி இருக்கிறது. சென்னையில் போக்குவரத்து வசதியை மேம்படுத்துவதில் முக்கியமான தேனாம்பேட்டை மேம்பாலப் பணிகளில் தவெக அரசு மெத்தனப்போக்குடன் செயல்படுவது பொதுமக்களை அதிருப்தி அடையச் செய்துள்ளது.